<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>

<u>OS. No. 195/2020</u>

2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ம் நாள் பன்னீர் செல்வம் என்பவர் 2002–ம் ஆண்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18–ன் கீழ் திருமதி. மங்கலேஸ்வரி, நகல் கண்காணிப்பாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பன்னீர் செல்வம் | தொழில் | : | விவசாயம் |
| த/பெ | : | கருப்பத்தேவர் | ஜாதி | : | --- |
| ஊர் | : | விக்கிரமங்கலம் | சமயம் | : | --- |
| வட்டம் | : | உசிலம்பட்டி | வயது | : | 63 |
| மாவட்டம் | : | மதுரை | | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் விடுக்கப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர், அவர் பி.வா.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.</u>

எனக்கு சாட்சி சொல்ல வருமாறு அழைப்பாணை வந்திருந்தது. அதன்படி தான் நான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். வாதியும், அவரது சகோதரர் ஜெயராஜீம், வாதியின் தகப்பனார் ஆறாம்புலியும் சேர்ந்து கடந்த 05.03.2014–ம் தேதியில் 5ம் பிரதிவாதிக்கு ஓர் ஒத்தி பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒத்திப் பத்திரம் பதிவில்லாதது. அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.5 ஒத்திப்பத்திரத்தில் கண்ட 3வது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். அந்த ஒத்தி 3 வருட காலத்திற்கு எழுதப்பட்டிருக்கிறது. அந்த ஒத்திப்பத்திரத்தில் கண்ட சொத்து விக்கிரமங்கலம் பஞ்சாயத்தில் இருக்கிறது. அந்த ஒத்திப் பத்திரம் ரூ.1,25,000/–த்திற்கு எழுதப்பட்டது. அந்த ஒத்திப் பத்திரத்தில் என்னோடு சாட்சியாக கழுவன் , மற்றும் ரவீந்திரன் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறார்கள். அத்தோடு அந்த ஒத்திப் பத்திரத்தில் வாதியும், வாதியின் சகோதரரான ஜெயராஜீம், தகப்பனார் ஆறாம்புலியும்

கையொப்பம் செய்திருக்கிறார்கள். அவர்களை தவிர்த்து வேறு யாரும் கையொப்பம் செய்திருக்கிறார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ஒத்திப் பத்திரத்தை ஹரிஹரன் என்பவர் எழுதியதும், சாட்சியுமாக கையொப்பம் செய்திருக்கிறார். மேற்படி ஒத்தி பத்திரத்தில் வாதியும், அவரது சகோதரரும், வாதியின் தகப்பனாரும் கையொப்பம் செய்ததை நானும் மற்ற சாட்சிகளும் பார்த்தோம். அதேபோல் நான் கையொப்பம் செய்ததை வாதியும், அவரது சகோதரரும் மற்றும் தகப்பனாரும் பார்த்தார்கள். ஒத்திப் பத்திரத்தை கண்ட சொத்தை 5ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார்.

குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/-G.Prabakaran,
Sub Judge,
Usilampatti (FAC).